**O.S.No.123/2010**

**Date:11.12.2018**

**வாதி தரப்பு சாட்சி 2 – சிவசுப்பிரமணி த-பெ. அய்யனார்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி அழைத்ததின் பேரில் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். வாதியின் வழக்கறிஞரின் அண்ணன் மகன் தான் வாதி என்றால் சரிதான். வாதி வழக்கறிஞர் சொல்லிதான் இந்த நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நான்கு எல்லை விஸ்தீரணம் சொல்லப்பட்டதா என்றால் சொல்லவில்லை. கொடிவழி ஜாபிதா எந்த வருவாய்த்துறை ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆவணத்தின் அடிப்படையில் இல்லை எனக்கு நேரடியாக தெரிந்ததின் அடிப்படையில் தாக்கல் செய்தேன். வாதி மற்றும் வாதியின் வழக்கறிஞர் சொல்லிதான் மேற்படி கொடிவழி ஜாபிதா தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து என் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. முன்னோர்களுககு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என்ற நிலையில் எந்த தேதியில் எப்போது பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் வாய்க்கரலாக பிரிக்கப்பட்டது ஆவணங்கள் எதுவும் இல்லை. வருவாய்த்துறை ஆவணங்களில் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதுசவம்பந்தமாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை தாக்கல் செய்து அதில உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி வாதயின் வழக்கறிஞர் எனக்கு உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மாட்டுக் கொட்டகை போட்டதற்கு வருவாய்த்துறையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் மாட்டுக் கொட்டம் எந்த பக்கம் உள்ளது என்றால் சொல்லவில்லை. தாவாச் சொத்தைப் பற்றியும் வழக்கு விபரம் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.